<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண். 43/2007</u>

DW1 – திரு. மதியரசன் நாள். 09.08.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

<u>குறுக்கு விசாரணை</u>

1. பி.வா.சா.ஆ.15 ஆவணத்தை குறித்து எனது தரப்பில் கூடுதல் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டு தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தை பொறுத்தவரை இந்த வழக்கில் அது தொடர்பாக கூடுதல் எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றும் தாக்கல் செய்துள்ளேன் என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இராமநாதபுரம் வருவாய் அலுவலரிடம் சீராய்வு மனு தாக்கல் செய்யும்போது சர்வே எண். 53/2 எனக்கு பாத்தியப்பட்டது என உரிமை மூலத்தை காட்டக்கூடிய ஆவணத்தை உடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

2. இவ்வழக்கின் வாதி மேற்படி சர்வே எண்.53/2 மயானம் என்று தவறுதலாக உள்ளது என்றம் அதனை ரத்து செய்து அவரது பெயருக்கு பட்டா வழங்க கோரி இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் அந்த உத்தரவின் நகல் எனக்கும் எனது வழக்கறிஞர் உதுமான் என்பவருக்கும் நகல் கொடுக்கப்பட்டது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 உத்தரவில் வெள்ளாளர் டிரஸ்ட் என்பதாலும் 53/2

வெள்ளாளர் டிரஸ்ட்க்கு பாத்தியமானது என்பதாற்கான ஆதார் ஆவணங்களின் அசல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருவாடானையில் உள்ளதாகவும் தாவா சொத்து மேற்படி கோர்டில் அசல் வழக்கு எண்.43/2007 என்ற வழக்கு நிலுவையில் இருப்பதாகவும் தெரிவித்துள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.5 வரி ரசீதானது தொண்டி பேரூராட்சியல் முனியசாமி கோவிலுக்கு வரி விதிப்புக்காக போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி முனியசாமி கோவில் கட்டப்பட்டுள்ள சர்வே எண்.53/1 என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் சர்வே எண்கள்.53/1 மற்றும் 53/2ல் முனியசாமி கோவில் கட்டப்பட்டுள்ளதாக சொல்லியிருப்பது தவறு என்று சொன்னால் 53/1 முழு நிலமாக இருந்து 53/2 உட்பிரிவு செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ மற்றும் இராமநாதபுரம் வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்த சீராய்வு மனுவிலும் மேற்படி சர்வே எண்.53/1ல் இருந்து தான் 53/2 என பிரிந்தது என குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் ஞாபகம் இல்லை.

4. பி.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.6 வரி ரசீதுகளை பற்றியும், பி.வா.சா.ஆ.7, பி.வா.சா.ஆ.9 மற்றும் பி.வா.சா.ஆ.10 பற்றிய விவரத்தையும் மேற்படி சீராய்வு மனுவில் சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. பி.வா.சா.ஆ.8 அடங்கலில் சர்வே எண்.53/1 முனியசாமி கோவில் மற்றும் மயானம் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ.8 அடங்கலுக்கு விரோதமாக சீராய்வு மனுவில் சர்வே எண்கள்.53/1 மற்றும் 53/2 ல் முனியசாமி மற்றும் மயானம் உள்ளதாக சொல்லியுள்ளேன் என்றும் அது தவறானது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 மாவட்ட வருவாய் அலுவலர் உத்தரவில் சர்வே எண்.53/2 மயானமாகவே பராமரிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. சர்வே எண்.53/2 சம்பந்தமாக மேற்படி சீராய்வு மனுவிலோ அல்லது விசாரணையின் போதோ இவ்வழக்கு நிலுவையில் உள்ள விவரத்தை நான் தெரியப்படுத்தவில்லை என்று சொன்னால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் இவ்வழகக்கு நிலுவையில் உள்ள விவரத்தை சீராய்வு மனுவின் எதிர்தரப்பினரும் இவ்வழக்கின் வாதிததான் தெரிவித்தார் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.15 ஆவணத்தில் இவ்வழக்கு நிலுவையில் இருப்பதால் எதிர்மனுதாரர் உரிமையியல் நீதிமன்ற தீர்ப்புக்கு பின்அதன் அடிப்படையில் பரிகாரம் தேடி கொள்ளலாம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. என் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் மூலமாக சர்வே எண். 53/2 சொத்தில் எந்தவொரு உரிமையும் ஏற்படக்கூடியது இல்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.15 ல் அசல் ஆவணத்தை என் வசம் வைத்துக்கொண்டு உள்நோக்கத்தோடு நகல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மேற்படி அசல் ஆவணம் தொலைந்து விட்டது. பி.வா.சா.ஆ.15 ஆவணம் மூலமாக தாவா சொத்தை பொறுத்தவரை என்னுடைய உரிமைகள் நிலைநிறுத்தப்படவில்லை என்றும் வழக்கு சொத்தில் எனக்கு எந்தவொரு உரிமையும் ஏற்படக்கூடியது இல்லை என்றால் சரியல்ல.

7. வருவாய் ஆவணங்களில் சர்வே எண்.53/2 ல் தவறுதலாக மயானம் என்று உள்ளதை பயன்படுத்தி வீண் வழக்காடி வருகிறேன் என்றால் சரியல்ல.

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை